DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No.30/2022 |
| Police Station | Thirupachethi P.S |
| Deposition of Witness for | LW.11/PW.9 |
| Name | கலாதேவி |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A1, 2 absent . Petition filed and allowed. A3 present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 08.01.2024 at 12.30p.m

**முதல் விசாரணை:**

நான் ஆவரங்காட்டில் குடியிருந்து வருகிறேன். கூலிவேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் வரைபடத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கடந்த 2019ம் வருடம் திருப்பாச்சேத்தியிலிருந்து சம்பவம் நடந்த இடத்திற்கு நடந்து வந்துகொண்டிருந்த போது திருப்பாச்சேத்தி போலீசார் என்னை அழைத்தார்கள். சம்பவ இடத்தை பார்வையிட்டு எழுதிகொண்டிருந்தார்கள். என்ன எழுதியுள்ளதை என்பதை என்னிடம் காட்டினார்கள். சம்பவத்தன்று கருத்தப்பாண்டி அவரது தம்பி மனைவி புஸ்பத்தை வெட்டியது சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு போலீசார் பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்தார்கள். போலீசார் அதில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.4** ஆகும்.

**கு.வி (எதிரிகள் தரப்பில்)**

புஸ்பம் எனக்கு என்ன உறவு என்றால் உறவுமுறை எதுவும் இல்லை. எனது சொந்த ஊர் ஆவரங்காடு என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கு எதற்காக வந்தீர்கள் என்பதை குறித்து போலீசார் விசாரணையில்

சொன்னீர்களா என்றால் சந்தைக்கு சென்றிருந்த போது வண்டி கிடைக்காமல் நடந்து வந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். என்னிடம் போலீசுார் 2, 3 கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டது என்று என்னிடம் போலீசார் படித்து காட்டவில்லை என்றால் சரிதான். என்னை தவிர வேறு யாரும் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட புஸ்பம் என உறவுக்கார தங்கைமுறை வேண்டும் என்றும், சம்பவ இடத்தில் வைத்து நான் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கையெழுத்தை திருப்பாச்சேத்தி காவல் நிலையத்தில் போலீசார் தயார் செய்து வைத்திருந்த ஆவணத்தில் மட்டும் போட்டேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலிருந்து ஆவரங்காட்டிற்கு செல்வதற்கு வழி இல்லை என்றால் சரிதான். போலீசார் சம்பவம் நடந்து 2, 3 நாட்கள் கழித்து விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்து மறுநாள் தான் போலீசார் என்னை விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் யார் யார் வீடு உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் என் முன்னிலையில் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**